# கட்டைக்காட்டு மோதலில் பொம்மர், ஹெலி சேதம்

விலை ரூபா 4-50

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 4 இதழ்: 159
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 20-7-1991

[யாழ்ப்பாணம்]
கட்டைககாடு, வெற்றிலைக் கேணிப் பகுதியில் புலிகள் மேற்கொண்ட கடும்தாக்குதலில் குண்டுவீச்சு விமானமொன்றும், ஹெலி ஒன்றும் பலத்த சேதமடைந்துள்ளது.

நேற்று முன்தினம் இப்பகுதிகளில் புலிகள் மீது இராணுவம் மேற்கொண்ட விமானத் தாக்குதலை புலிகளின் விமான எதிர்ப்புப்பிரிவினர் மிக சாதுரியமாக முறியடித்துள்

(4-ம் பக்கம் பார்க்க)

## படைகள் வெளியேற திட்டம்?

[யாழ்ப்பாணம்]
வடபகுதியிலுள்ள சகல பகுதிகளிலுமிருந்து ஒரே நேரத்தில் படையினர் வெளியே வந்து தாக்குதலை நடாத்தும் திட்டம் குறித்து பாதுகாப்பு அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

ஆனையிறவு முகாம் முற்றுகையை முறியடிக்க முடியாத நிலையிலும், வெற்றிலைக்கேணி கட்டைக்காடு பகுதியிலுள்ள

(4-ம் பக்கம் பார்க்க)

## ருகமைக்கு அனுப்பப்பட்ட துருப்பினர் சடலங்கள்

[கொழும்பு]
கட்டைக்காடு, வெற்றிலைக் கேணியில் இடம்பெற்றுவரும் மோதலில் விடுதலைப்புலிகளின் தாக்குதலில் பலியான நான்கு படையினரின் சடலங்கள் அவர்களது வசிப்பிடமான

(4-ப்பக்கம் பார்க்க)

## ● முன்னர் வந்த படைகள்

# முன்னேறும் முயற்சி தோல்வி

# 3-வது இராணுவப்பிரிவு விரைவு

## மன்னார், முல்லை, வவுனியா படைகளையும் அனுப்ப அரசு ஏற்பாடு

(கொழும்பு)
**ஆனையிறவு இராணுவமுகாமை விடுதலைப்புலிகளின் முற்றுகையிலிருந்து மீட்டெடுக்கும் முயற்சியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் முயற்சிகள் தோல்விகண்டுவருவதையடுத்து மூன்றுவது படைப்பிரிவு ஒன்றை நேற்று பாதுகாப்பு அமைச்சு அவசரமாக கட்டைக்காடு பகுதிக்கு அனுப்பிவைத்திருக்கிறது.**

இதேவேளை மன்னார், முல்லைத்தீவு வவுனியா பகுதியிலுள்ள படைகளையும் ஆனையிறவு பகுதிக்கு அனுப்ப அரசு துரித ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனையிறவு முகாம் கடந்த பத்து நாட்களாக விடுதலைப் புலிகளின் கடுமையான முற்றுகைக்குள்ளாகியிருக்கிறது.

அங்கு சுமார் 800 ராணுவத்தினர் சிக்கியிருப்பதாகவும் படுகாயமடைந்த பல சிப்பாய்கள் அவசர சிகிச்சைபெற முடியாது மரணப் படுகையில் தவித்துக்கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனையிறவு முகாமுக்கு வெளியிலிருந்து எந்தவிதமான உணவு வகைகளும், குடிதண்ணீர் வகைகளும் வழங்க முடியாத நிலையில் ராணுவத்தினர் உள்ளனர்.

கேந்திர முக்கியத்துவம்

(4ம் பக்கம் பார்க்க)

## மன்னார்படையினரின் முயற்சி புலிகளால் முறியடிப்பு

(மன்னார்)
மன்னாரிலுள்ள வங்காலை இராணுவ முகாமிலிருந்து நேற்றுக் காலை 8-30 மணியளவில் கவசரக வாகனங்கள் சகிதம் படையினர் சிறுநாவற்குளம் பகுதிக்கு முன்னேறிய போது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலினால் முன்னேறமுடியாத படையினர் அவ்விடத்திலேயே நிலை கொண்டுள்ளனர்.

இதேவேளையில் நேற்றுக் காலை 11-30 மணியளவில் நாகதாளிக்கு வந்தபடையினர் மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தையும் ஷெல் தாக்குதலையும் மேற்கொண்டபின்னர் முகாம் திரும்பினர். (க)

## ஹெலி தாக்குதலில் தந்தையும் மகனும் பலி

(யாழ்ப்பாணம்)
நேற்று இரவு 9மணியளவில் கட்டைக்காட்டிலிருந்து அச்சுவேலிப்பக்கமாக வந்த ஹெலி கொப்டர் ஒன்று அச்சுவேலியில் குடிமனைகளை நோக்கி ரொக்கட் லோஞ்சர் தாக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

## பிரான்சில் இறங்கி வேறு விமானம் ஏறவும் விஸா தேவை

(பாரிஸ்)
பிரான்ஸ் நாட்டு விமான நிலையத்தில் இறங்கி அடுத்த விமானத்தில் ஏறுவதற்கு இனிமேல் தனி விஸா எடுக்க வேண்டும் என இலங்கையில் உள்ள பிரான்ஸ் தூதரகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு தனி விஸா எடுக்காதுவிட்டால் விமானத்தை

(4-ம் பக்கம் பார்க்க)

## நேருக்குநேர்மோதுமளவுக்கு புலிகளின் தாக்குதலில் மாற்றம்

### - இராணுவத் தளபதி.

(கொழும்பு)
"விடுதலைப்புலிகள் மறைந்திருந்து படையினரைத் தாக்கும் உத்தியைக் கைவிட்டு தற்போது நேருக்குநேர் நின்று படையினருடன் மோதுகிறார்கள்.

யுத்த முனைக்கு நேற்றுமுன்தினம் சென்று திரும்பிய சிறிலங்கா இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க லங்கா புவத்துக்கு

[4-ம் பக்கம் பார்க்க]

## வீரமரணம்

(யாழ்ப்பாணம்)
வெற்றிலைக்கேணி – கட்டைக்காடு பகுதியில் இராணுவத்துடன் நடைபெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த சுதா [அச்சுதன் மகேந்திரம், திருமலை], கஜன் [சுந்தரராசா மகேஸ்வரன் அராலி],

[4-ம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவில்சிக்கியபடைகளை மீட்க உதவுமாறு கோரிக்கை

(கொழும்பு)
ஆனையிறவு விடுதலைப்புலிகளின் முற்றுகைக்குள் சிக்கியுள்ள இராணுவத்தினரை மீட்டுத்தருமாறு இராணுவத்தினரின் உறவினர்கள் அரசாங்கத்திடம் கோரிகை விடுத்துள்ளனர்.

ஆனையிறவு முகாமில் சிக்கியுள்ள இராணுவத்தினரின் பெற்றோர்கள், மற்றும் குடும்

(4 ம் பக்கம் பார்க்க)

## நவீன ஆயுதங்களை பயன்படுத்தத் திட்டம்?

[கொழும்பு]
ஆனையிறவு முகாம் முற்றுகையை முறியடிக்க இராணுவத்தினர் புதிய ரக நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தத் திட்டமிட்டு வருவதாக 'ஏஜென்ஸி'ச் செய்தி ஒன்று தெரிவித்தது.

படையினர் பயன்படுத்தும்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு மோதல்: மேலும் 15 சிப்பாய்கள் நேற்று முன்தினம் பலி

(கொழும்பு)
ஆனையிறவு முகாம்பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் படையினர்மீது மேற்கொண்ட கடும் தாக்குதலினால் 15 படையினர் கொல்லப்பட்டதாக இராணுவ உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளையில் ஆனையிறவு

(4ம் பக்கம் பார்க்க)

## அரைகுறை புதைகுழியில் ராணுவ உடல்கள் புதைப்பு

(கொழும்பு)
ஆனையிறவில் இடம்பெற்றுவரும் மோதல்களின்போது கொல்லப்படும் இராணுவத்தினரின் சடலங்கள் அவர்கள் இறந்த இடங்களிலே புதைக்கடுவதாகத் தெரிவிக்கப்படுகி

(4ம் பக்கம் பார்க்க)

## பெருமளவு இராணுவம் காயம்

(கொழும்பு)
கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி பகுதியில் தினமும் படுகாயமடையும் பெருமளவு படையினர் தினமும் விமானம்

[4-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## தரன் ஸ்ரூடியோ

அவசரமாக பாஸ்போட் அடையாள அட்டைப்படங்கள், றபர்சீல்கள், விளம்பர போட், பிளாஸ்ரிக் போட் முதலியன பெறுவதற்கு தரன் படப்பிடிப்பாளர் 189, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-4896)

## நல்ல சந்தர்ப்பம்

நெல்லியடி, பருத்தித்துறை வாசகர்களுக்கு! நெஞ்சைத் தொடும் பத்து ''மீரா நாவல்கள்'', ஒவ்வொன்றிலும் இருபத்தைந்து பிரதிகள் மட்டுமே விற்பனைக்குண்டு. முந்துங்கள் மொடேர்ன் புத்தகசாலை, பஸ் நிலையம், நெல்லியடி. (சி 5001)

## பாலாஜி புத்தகசாலை

புத்தகம், கொப்பி கட்டுவதற்கு ஆர்வமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. 15/6, முதலாம் ஒழுங்கை, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். எ-1440

## வியாழமாற்றம்

வருடம் முழுவதற்கும் 12 இராசிக்கும் தனித்தனியான பலன்களுடன் விற்பனையாகின்றது. கணித்து வெளியிடுபவர் ஜோஸ்யர். சகல புத்தக சாலைகளிலும் விற்பனையாகின்றது. எ-1441

## விண்ணப்பப்படிவம்

மருத்துவ தாதிமார் பதவிக்கான படிவமும் விபரமும் விற்பனையாகிறது. கடை திறக்கும் நேரம் காலை 6—9 மாலை 1—6, நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய் (சி 5003)

## ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும், ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும், உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். தொடர்புநேரில் சனி, ஞாயிறு காலை 11-00—12-00 மணி. S ஜெயராசா, 204, மானிப்பாய் ரோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (4962)

## விற்பனைக்கு

வேப்பெண்ணெய் நெற்பயிரை நோய், பீடை, பூச்சிகளிலிருந்து பாதுகாக்க உதவுகிறது போத்தல் ரூபா 90/-. அரைப்போத்தல் ரூபா 45/-. மில்க்வைற், யாழ்ப்பாணம். [ஏ-1446]

## விசேட சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் ஸ்ரீமத் நாராயணனுக்கும் சனீஸ்வர பகவானுக்கும் இன்று சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

இன்றைய இன்னல்கள் நீங்கவும், நாடு நலம் பெறவும் இந்த விசேட வழிபாடு நடைபெறவுள்ளது.

## விடுதலை

(சென்னை)

தமிழக பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர் திரு.ராமதாஸ் சடந்த வாரம் உண்ணாவிரதம் இருந்த போது தற்காப்பு நடவடிக்கையாக கைது செய்யப்பட்ட 6000 பேரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்[பூ]

## வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள் தற்போது நலன்காக்கும் பணிகளில் ஈடுபட்டு உள்ளனர்.

இதுவரை தம்மை அப்பணியில் இணைத்துக்கொள்ளாதவர்கள் உடனடியாக கல்லூரியில் காலை 8-00 மணி தொடக்கம் மாலை 6-00 மணி வரை இயங்கிக் கொண்டிருக்கும் மாணவர் அவையின் தொடர்பகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு, மாணவர் அவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## படிவங்கள் தட்டுப்பாடு

[மானிப்பாய்]

யாழ். பிறப்பு, இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் 1954ம் ஆண்டின் பின் பிறந்தவர்களுக்கு எழுதி வழங்கப்படும் இரு பக்கப் படிவங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் அவசர தேவைகளுக்கு மேலதிக பதிவாளரினால் வழங்கப்பட்டு வந்த முன்னுரிமை தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

## இராசி பலன்

20-07-1991

சனிக்கிழமை

நவமி பி. ப. 2-27 வரை, சுவாதி ந. ப. 12-12 வரை, அமிர்தசித்தயோகம், இராகு காலம் காலை 9-01 முதல் 10-31 வரை, சுபநேரம் மாலை 3-01 முதல் 4-31 வரை.

மேஷம்; வாழ்க்கைச் சுகம், இனசன மகிழ்ச்சி, பணவரவு.

இடபம்: தொழில் லாபம், அவசர பயணம், காரியசித்தி.

மிதுனம்: புத்திரர் கவலை, அலைச்சல், அதிக யோசனை.

கடகம்: அகம்பாவம், பெரியோர் பகை, மனக்குறை.

சிங்கம்: குடும்ப விவகாரம், நண்பர் உதவி, மனைமாற்றம்.

கன்னி: பொருளாதார சிக்கல், அமைதிக் குறைவு, உடல் உபாதை.

துலாம்; தொழில்பாராட்டு, சுபகாரியம், கல்வியால் சிறப்பு.

விருச்சிகம்; விரோதிகள் துன்பம், வாயுத் தொல்லை, அவமதிப்பு.

தனுசு; வாக்குவன்மை, புதிய நட்பு, காரிய வெற்றி.

மகரம்: வெகுஜன மதிப்பு, நற்காரியம், தெய்வ தரிசனம்.

கும்பம்: கருத்துமோதல், தொழில் நஷ்டம், தாயார் பகை.

மீனம்: வேண்டாத தொல்லை, பணக் கஷ்டம், போட்டி மனப்பான்மை.

- ஜோஸ்யர்

# திருமலை-மணலாறு தொடர்ந்து உக்கிர மோதல்

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள சலப்பையாறு, புடவைக்கட்டு பகுதிகளிலும் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையில் தொடர்ந்தும் கடும் மோதல்கள் நடைபெற்று வருகிறது.

மணலாறு பகுதியிலும் தொடர்ந்து மோதல்கள் இடம்பெறுகிறது. [153]

# மருதங்கேணி ஆஸ்பத்திரி மூடப்பட்டுள்ளது

[புலோலி]

வெற்றிலைக்கேணியில் நிலைகொண்டிருக்கும் படையினருக்கு உதவியாக கடலில் இருந்து நடாத்தப்படும் பீரங்கித் தாக்குதல்களினால் தாளையடி தபால்நிலையமும் சேதத்துக்குள்ளானது.

ஏற்கனவே கடற்பீரங்கிக் குண்டுத் தாக்குதலினால் சேதமடைந்த மருதங்கேணி அரசினர் வைத்தியசாலை தொடர்தும் நடைபெற்றுவரும் கடற்பீரங்கி, விமானத் தாக்குதல்களின் எதிரொலியாக மூடப்பட்டுள்ளது. இங்குள்ள வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம் உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஆகியன செயல்படமுடியாத நிலையில் உள்ளன. [61]

# ஆசிரியர்களுக்கு புதியசம்பளத்திட்டம்

கொழும்பு

இலங்கையின் சகல பகுதிகளிலும் கடமையாற்றும் அனைத்து ஆசிரியர்களுக்கும் புதிய சம்பளத்திட்டம் விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் புதிய சம்பளத்திட்டம் பற்றிய விபரம் அக்டோபர் 6-ஆம் திகதி அறிவிக்கப்படுமெனவும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு இவ்வேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் 1 லட்சத்து 80 ஆயிரம் ஆசிரியர்கள் நன்மை பெறுவார்களெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# முல்லையில் புலிகள் தாக்கு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவமுகாமிற்கு பாதுகாப்பாக சிலாவத்துறை முகாம் காவலரணிலிருந்து நேற்றுக்காலை முன்னேறி வந்த இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள்தாக்குதல் நடத்தினர்கள்.

காவலரணிலிருந்து 100 யார் தூரத்துக்கு முன்னேறி வந்த படையினரை இடைமறித்து புலிகள் கடும் தாக்குதல் நடத்தினர்கள் புலிகளின் தாக்குதலையடுத்துஇராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றார்கள்.

உ

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு!

அன்புடையீர்!

அமரத்துவம் எய்திய எமது குடும்பத் தலைவர்

தவில் வித்துவான்

**என். ஆர். சின்னராசா**

அவர்களின்

அந்தியேட்டிக் கிரிகைகள் எதிர்வரும் 20-07-1991 (இன்று) சனிக்கிழமை காலையிலும் வீட்டுக்கிருத்தியம் 21-07-1991 ஞாயிற்றுக்கிழமை பகல் 10-00 மணிக்கும் எமது இல்லத்தில் நடைபெற உள்ளன. இவ்விரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு எங்கள் தலைவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

அன்னை, மனைவி, மக்கள், மருகர்

கந்தசாமி கோவில் வீதி, இணுவில். (ஏ 1449)

## தட்டெழுத்தாளர் தேவை

தமிழ் — ஆங்கிலம் இரு மொழிகளிலும் தட்டச்சு செய்வதில் தேர்ச்சியுள்ள தட்டெழுத்தாளர் ஒருவர் ஒரு கிறிஸ்தவ ஸ்தாபனத்திற்குத் தேவைப்படுகின்றார்.

பின்வரும் விலாசத்திற்கு 31-07-91க்கு முன்னர் விண்ணப்பம் செய்க.

இயக்குநர்

C. C. F.

அத்தியட்சாதின காரியாலயம்

வட்டுக்கோட்டை. [ஏ-1447]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அந்தோனி சிசிலியா [எலிசம்]

(அல்லைப்பிட்டி)

தோற்றம்: 15-09-1925 — மறைவு: 20-07-1990

''என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்''

ஆண்டொன்று போனாலும் வைத்த
அன்புதான் மாறிடுமோ
அன்போடு அறிவும் ஊட்டி
அருமருந்தாய் எமைக் காத்த
குடும்ப ஒளிவிளக்கே! உமைப் பிரிய
கொடுமைதான் என்ன செய்தோம்.

உங்கள் பிரிவால் துயருறும்!
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

2-ம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி. [சி-5002]


## 163 நாடுகளை வலம்வருவது DHL துரித தபால் சேவை

உறவினர்களின் விமானத் தபால்கள் பாதுகாப்பாக சென்றடைய உங்கள் தபால்களை யாழ்ப்பாண அலுவலகத்தில் ஒப்படையுங்கள்!

**DHL International**

C/o, Cosmos

Marketing Services,

120, K. K .S, Road, Jaffna.

DHL WORLDWIDE EXPRESS

(ஏ-1448)

இன்று அமரர் கே. சி. தங்கராசா அவர்கள் நினைவுதினம்

# பேச்சைக்குறைத்து செயலில் சாதனை புரிந்த பெரியார்

யாழ்ப்பாணத்தமிழ்த் தினசரிகளின் தந்தையான அமரர் கே. சி. தங்கராசா மறைந்து இன்று நான்காவது ஆண்டு நினைவுதினமாகும்.

தமிழ்ச்சமூகத்திற்கு மிக அடக்கமாகப் பணிபுரிந்த ஒரு தங்கமான மாபெரும் மனிதர் அமரர் கே. சி தங்கராசா தமது அடக்கமான சமூக, சமய, கல்விப்பணிகளால் தமிழ் மக்களின் மதிப்பைத் தேடிக்கொண்டவர்.

வண்ணார்பண்ணை ஆயுள்வேத வைத்தியர் கந்தப்பிள்ளை சிற்றம்பலம் தையல்நாயகி தம்பதிகளின் மூத்த புதல்வரான திரு. கே. சி. தங்கராசா 1907 ஆம் ஆண்டு ஜூன் 20ந் திகதி பிறந்தார்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கல்வி கற்று தமது படிப்பை முடித்துக்கொண்ட இவர் ரப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தில் வேலைக்கு சேர்ந்து கொண்டார். ரப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திலிருந்து இவர். இளைப்பாறும் போது அதன் உதவிகட்டுப் பாட்டாளராக அவர் பதவி உயர்வு பெற்றிருந்தார்.

அரசாங்கத் துறையிலிருந்து ஒய்வுபெற்ற திரு. தங்கராசாவுக்கு தனியார் துறையில் சேவையாற்ற அழைப்பு தானாகவே அவரைத் தேடிவந்தது. டிக்கிஸ் கம்பனியின் இயக்குனராக கடமையாற்றினார். அதன் பின்னர் டைம்ஸ் ஒவ் சிலோன் நிறுவனத்தில் முகாமைத்துவ இயக்குனராக பதவி ஏற்றார்.

ரைம்ஸ் பத்திரிகைக்குத் தேவையான பத்திரிகையாளர்களை திரு. தங்கராசா தாமே பொறுப்பு நின்று நேரடியாக தெரிவுசெய்தார். திரு. பிராங் மொராயல் இவரால் அன்று தெரிவு செய்யப்பட்ட மிகப் பிரபல்யமான பத்திரிகையாளர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர். திரு. தங்கராசாவின் நிர்வாகத்துக்கு உட்பட்டிருந்த காலத்திலேயே ரைம்ஸ் ஒவ் சிலோன் நிறுவனம் மிகவும் புகழ்பெற்றுவிளங்கியது. தமது நிர்வாகத் திறமையால், ஆற்றலால் அவர் பல உயர் பதவிகளை வகித்தார்.

1958ம்ஆண்டு கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்1958முதல் 1978ம் ஆண்டு வரை அதன் தலைவராக இருந்து தமது நிர்வாகத்திறமையாலும் ஆற்றலாலும் கூட்டுத்தாபனத்தை திறம்பட வளர்த்துவிஸ்தரித்து பெரும் கைத்தொழில் நிலையமாக்கினார் 1958ம் ஆண்டு இனக்கலவரத்தின் போது



தெற்கில் அகதிகளாகிய தமிழருக்கு தொண்டனாக நின்று பணிபுரிந்தார்

இவரது தாய்வழி மாமனாரும், தமிழ்நாட்டில் சிதம்பரத்தில் துறவு பூண்டு வந்தவருமான இலக்கண சுவாமிகள் எனும் ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் அவர்களை இந்தியாவில் 1947ம் ஆண்டு தரிசித்த சமயம் தமிழ் நூல்களை வெளியிடும் நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற கருத்து இவர் மனதில் உருவாயிற்று அதுவே பின்னர் ஈழநாடு நிறுவனமாக மலர்ந்தது

1959ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ம் திகதி 'ஈழநாடு' வார இதழை ஆரம்பித்தார். 1961ம் ஆண்டு பெப்ரவரி 11ந் திகதி முதல் ஈழநாடு தினசரி இதழாகப் பரிணமித்து வெளி வந்துகொண்டிருக்கிறது.

அரசாங்கத் துறையிலும் கூட்டுத்தாபனத்துறையிலும் தனியார்துறையிலும் அவர் பொறுப்புமிக்க பல உயர்பதவிகளை வகித்து வந்தபோதிலும் சமயப்பணிகளையும் சமுதாயப் பணிகளையும் இவர் மறந்துவிடவில்லை.

இரத்மலானை இந்துக்கல்லூரியும் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, சரஸ்வதி மண்டபம் திரு. தங்கராசாவின் நினைவுச் சின்னங்களில் சில.

ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தை நிர்வகிக்க அறங்காவலர் சபையொன்றை ஆக்கிய பெருமையும் திரு. தங்கராசாவை சாரும்.

பேச்சைக் குறைத்து, செயலில் சாதனைகள் புரிந்த பெரியார் இவர், கே. சி. தங்கராசாவின் புகழ் வானளாவியது உயர்ந்த நோக்கத்தோடு உன்னத பணிபுரிந்த இவர் நாமம் என்றும் வாழும்.

(மா-து)

## கொட்டம் அடங்கிடும்...

கட்டைக் காட்டிலும் ஆனையிறவிலும்
களத்தில் ஆடும் புலிகள்
துட்ட கெமுனுவின் வாரிசு தம்மைத்
துவம்சம் செய்வர் உறுதி.

வீரர்க்கு மரணம் ஒருமுறை என்றிடும்
வேங்கைக்கு நிகரிந்த மண்ணில்
யாருண்டு? கூலிக்கு மார்தட்டும் வீணரின்
கொட்டம் அடங்கிடும் தன்னில்

எத்தனை பொம்மர் எத்தனை ஹெலிகள்
எறிகணை கப்பல்கள் வரினும்
அத்தனை கலங்களும் அழிந்திடும் ஆனை
யிறவினில் நம்கொடி பறக்கும்.

தாயக மண்ணை மீட்டிடும் பணியில்
தம்மையே தந்திடத் தயங்காச்
சேய்களின் அன்னை செந்தமிழ்ப் பெண்ணாள்
செங்கோலும் பொய்த்திடா துண்மை!

— இ. ரி. —

# விமானத் தாக்குதலினால் வீடுகள் தீப்பற்றி எரிகின்றன

(நமது புலோலி நிருபர்)

வடமராட்சி கிழக்கில் மருதங்கேணி தொடக்கம் கட்டைக்காடு வரையிலான பகுதிகளில் குண்டுவீச்சுக்களை நடத்திவரும் ஹெலி, பொம்மர், அவ்ரோ விமானங்கள் வடமராட்சி கிழக்குப்பிரதேசம் முழுவதும் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

குடத்தனை தொடக்கம் சுண்டிக்குளம் வரையில் இத் தாக்குதல் நடைபெற்றுவருகிறது. இப்பிரதேசத்துக்கு ஊடாக 15 நிமிடங்களுக்கு ஒரு விமானமாவது பறந்து செல்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

யுத்தம் நடைபெற்றுவரும் வெற்றிலைக் கேணியையும் அதனை அண்டியுள்ள ஆழியவளை, கட்டைக்காடு, உடுத்துறை போன்ற இடங்களில் கடலிலிருந்து பீரங்கித்தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இத் தாக்குதல்களுக்கு இலக்காகும் வீடுகள் எரிந்துவிடுகின்றன. இங்கு நடைபெற்றுவரும் விமான, கடல் பீரங்கிக் குண்டுத் தாக்குதல் சத்தங்கள் இப்பகுதியின் எட்டு மைல் சுற்றுடலுக்குக்கேட்கின்றது. சூனியப்பகுதியாகக் காட்சிதரும் இப்பகுதியிலுள்ள பனை, தென்னை மரங்களும் குண்டுவீச்சுத் தாக்குதலினால் முறிந்து விழுந்துள்ளன.

வெற்றிலைக்கேணியில் ஆறுவது நாளாக யுத்தம் நடைபெற்று வருகிறது. விமான, பீரங்கித் தாக்குதல்களுக்கு மத்தியில் புலிகள் பலமான தாக்குதல்களைத் தொடுத்து வருகின்றனர். படையினர் நிலைகொண்டுள்ள இடத்தை விட்டு நகரமுடியாதுள்ளனர்.

(61)

★ வடக்கே உணவைக் கொண்டு செல்ல

# காவல் நிலையப் படைகளுக்கு லஞ்சம் கொடுக்கும் அவலம்

## வெரித்தாஸ் விமர்சனம்

(மணிலா)

''தற்போது வடமாகாணத்தில் குறிப்பாக ஆனையிறவு, வவுனியாப்பகுதிகளில் நடைபெறும் கடும் யுத்தத்தினால் யாழ்ப்பாணத்திலும் மற்றும் இடங்களிலும் அத்தியாவசிய பொருட்களின் விலை மேலும் உச்சநிலையை அடைந்துள்ளது.''

இவ்வாறு 'வெரித்தால் வானொலி' தெரிவித்துள்ளது, அச்செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

ஏற்கனவே இலங்கை இராணுவத்தால் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளினால் அத்தியாவசியப் பொருட்களுக்கு இருந்த விலையேற்றம், தற்போதுள்ள நிலையால் அதியுயர்வை அடைந்துள்ளது.

பொருளாதார ரீதியில் பாதிப்புற்றிருக்கும் கீழ்மட்ட மக்களுக்கு ஒருவேளைச் சாப்பாடு தன்னும் சாப்பிடமுடியாமற் போயுள்ளது. அரசின் எரிபொருள் தடை மக்களை வெகுவாகப் பாதித்துள்ளது.

உணவுப் பொருட்களையும், வேறு சில அத்தியாவசியப் பொருட்களையும் தென்பகுதியிலிருந்து எடுத்துவரும் லொறிகள், வரும் வழியில் அமைந்திருக்கும் பல காவல் நிலைய இராணுவத்தினருக்கு லஞ்சம் கொடுக்கவேண்டியுள்ளது. கொண்டுவரும் பொருட்களை கூடிய விலைக்கே விற்கவேண்டியுள்ளது.

தற்போது அந்த லொறிகள் கூட வவுனியாவில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. எரிபொருள் தட்டுப்பாட்டினால் பயணிகள் பெரும் கஷ்டமுறுகின்றனர். 15 மைல் தூரம் செல்ல ஒருவர் 600 ரூபா செலவு செய்ய வேண்டியுள்ளது. இதனால் அதிகமானோர் சைக்கிளிலேயே பயணத்தை மேற்கொள்கின்றனர். அதனால் சைக்கிளுக்கும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. (பூ)

## நூல் நிலையம்

[கொழும்புத்துறை]

வட்டுவில் தெற்கு சாந்த நாயகி வித்தியசாலை மாணவர்கள் ஒருங்கிணைந்து தமக்கென நூல் நிலையம் ஒன்றினை அமைத்துள்ளனர்.

# காரைநகர் மாணவர் உணவுமுத்திரைக்கு பொருள்கள் வழங்கப்படுகிறது

(பண்டத்தரிப்பு)

காரைநகர் பகுதியிலுள்ள பாடசாலைகளின் மாணவருக்கான மாணவர் மதிய உணவு முத்திரைக்கான உணவுப் பொருட்கள் சுழிபுரம் வழக்கம்பரையிலுள்ள காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் வழங்கப்பட்டு வருகின்றது.

இடம் பெயர்ந்த பாடசாலை மாணவர்கள் தங்கள் தங்கள் மதிய உணவு முத்திரைகளை மேற்படி சங்கத்தில் சமர்ப்பித்து மதிய உணவுப் பொருட்களை பெற்றுக்கொள்ளலாம் என்று சங்கத்தின் பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

இன்று 20-ம் திகதி தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியாசாலை மாணவர்களும், 22-ம் திகதி வலந்தலை தெற்கு அ. மி. த. க. பாடசாலை மாணவர்களும், 23-ம் திகதி வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை மாணவர்களும். 24-ம் திகதி காரைநகர் கிழக்கு அ. மி. த. க. பாடசாலை மாணவர்களும், 25-ம் திகதி காரைநகர் மெய்கண்டான் வித்தியாலய மாணவர்களும், 26-ம் திகதி ஆயிலி சிவஞானோதய வித்தியாலய மாணவர்களும். 27-ம் திகதி வேரப்பிட்டி ஸ்ரீகணேச வித்தியாலய மாணவர்களும் 28-ம் திகதி காரை ஊரி அ. மி த. க. பாடசாலை மாணவர்களும் 29-ம் திகதி வியாவில் சைவ வித்தியாலய மாணவர் மாணவர்களும், 30-ம் திகதி சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய மாணவர்களும், அடுத்த மாதம் 2-ம் திகதி கலாநிதி தியாகராசா மத்திய மகாவித்தியாலய மாணவர்களும், 5-ம் திகதி யாழ்ரன் கல்லூரி மாணவர்களும் தங்கள் மதிய உணவு முத்திரைகச் சமர்ப்பித்து உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [72]

# "குண்டுமாரிபொழிந்தாலும் பாடசாலைகள் நடைபெறவேண்டும்"

## யாழ். கல்விப்பணிப்பாளர்

(வட்டுக்கோட்டை)

''குண்டுமாரி பொழிந்தாலும் பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் தொடர்ந்து நடைபெறவேண்டும். கல்வியே தமிழ் மக்களின் அழியாத சொத்து அதிபர்கள் ஆளுமை நிறைந்தவர்களாக - நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாகத் திகழ்ந்தால் எந்தப் பிரச்சினைக்கும் முகம்கொடுத்து பாடசாலையை மிகச்சிறப்பாக நடத்தலாம்.''

இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் யாழ். மாவட்ட முகாமைத்துவ நிலையத்தில் நடைபெற்ற இரண்டாந்தர அதிபர்களுக்கான முகாமைத்துவக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போது கூறினார்.

யாழ். மாவட்ட முகாமைத்துவ கல்வி அதிகாரி நா. தணிகாசலம் தலைமையில் நேற்று முன்தினம் இந்த முகாமைத்துவக் கருத்தரங்கு நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் யாழ். இந்துக்கல்லூரி அதிபர் அ. பஞ்சலிங்கம், முகாமைத்துவ விரிவுரையாளர் எஸ். சிவகுமார் ஆகியோரும் கலந்துகொண்டனர். (139

# சர்வதேச வானொலிகளில் ஆனையிறவு யுத்தச் செய்தி!

(லண்டன்)

ஆனையிறவில் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக நடைபெற்றுவரும் யுத்தத்திற்கு சர்வதேச வானொலிகள் மிகுந்த முக்கியத்துவமளித்து செய்திகள் ஒலிபரப்பி வருகின்றன.

'லண்டன் பி. பி. ஸி.' 'றேடியோ ஆஸ்திரேலியா', 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா', 'வெரித்தாஸ்', இந்திய வானொலி, டுபாய் வானொலி, மற்றும் வெளிநாட்டுப் பத்திரிகைகளும் தினமும் ஆனையிறவு போர் குறித்து செய்திகள் வெளியிட்டுவருகின்றன.

ஆனையிறவுப் போரில் இலங்கைப் படைள் புலிகளிடம் சிக்கித் தவிப்பதையும், புலிகளின் தீவிரப்போராட்டம் பற்றியும் இச்செய்திகளில் விமர்சிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (சி)

# உணவுக் கப்பல்களை அனுப்புமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு உடனடியாக உணவுக்கப்பல்களை அனுப்பிவைக்குமாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்கும் அவரின் செயலாளருக்கும் அவசர வேண்டுகோள் ஒன்றை யாழ். அரச அதிபர் திரு க. மாணிக்கவாசகர் விடுத்துள்ளார்.

அரச அதிபர் தமது வேண்டுகோளில் மேலும்தெரிவித்துள்ளதாவது:

யாழ்ப்பாணத்துக்குஉணவுக் கப்பல்களை அனுப்புவதற்கு, முப்படைத் தலைமைச் செயலகம் அனுமதிஅளிக்க மறுத்துள்ளதினால்,உணவுப்பொருட்களுக்கு தற்போது யாழ். குடாநாட்டில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த தட்டுப்பாட்டை போக்குவதற்கு உடனடியாக உணவுக் கப்பல்களை பருத்தித்துறை இறங்குதுறைக்கு அனுப்புவதற்கு ஆவனசெய்யும்படி கேட்டுள்ளார். [வி-153]

## திங்கள் முதல் திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மக்கள் வங்கிக் கிளைகள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அலுவல்களுக்காக எதிர்வரும் 22-ஆம் திகதி திங்கட்கிழமை முதல் திறந்திருக்கும். இக்கிளைகளில் கணக்கு வைத்துள்ள ப. நோ. கூ. சங்கங்கள் சம்பந்தப்பட்ட வங்கிக் கிளை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

### அரைகுறை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றது

மோதல் ஆரம்பித்த நாளிலிருந்து பல நாட்கள் அனாதரவாக உருக்குலைந்த நிலையில் கிடந்த பல சடலங்கள் மீட்க முடியாத நிலையில் அந்தந்த இடங்களிலே புதைக்கப்பட்டதாக கொழும்புச்செய்திகள் தெரிவித்தன.

பலசடலங்கள் அரைகுறையாகப் புதைக்கப்பட்டுள்ளதால் அவற்றிலிருந்து துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை காயமடைந்த படையினரில் பலர் சிகிச்சைபெறமுடியாதநிலையில் ஆபத்தான நிலையிலிருக்கிறார்கள். இவர்கள் படிப்படியாக பலியாகிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பயிற்சி

[யாழ்ப்பாணம்]

இன்று சாரணர்களின் சேவை அத்தியாவசியமாகவுள்ளமையினால், அதிலும் வீதி ஒழுங்கிற்கு உதவி பல இடத்திலும் வேண்டப்படுவதாலும் குறித்த பயிற்சியைக் கடந்த காலங்களில் பெறாத காங்கேசன்துறை சாரண மாவட்டத்தைச் சேர்ந்த சாரணர்கள், வழிகாட்டிகள், மாணவ தலைவர்களுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் பயிற்சி நடைபெறும்.

பயிற்சி சந்தா ரூபா 15/- மட்டும் கலந்து கொள்ள விரும்பும் குழுக்கள் உடன் விண்ணப்பிக்கவும். இப்பயிற்சியை இரண்டாம் வகுப்புச் சாரணர்கள் அனைவரும் பெற்றிருத்தல்வேண்டும் இப்பயிற்சி பெற்ற சாரணர் பிரதான வீதிகள், சந்திகளில் வீதி ஒழுங்கிற்கு பணியாற்ற அனுமதிக்கப்படுவர். இதற்கானவிசேட சின்னமும் வழங்கப்படும் என காங்கேசன்துறை சாரணர் மாவட்ட ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## இறுதியாண்டுப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

ஆயுர்வேத கல்லூரியின் டிப்ளோமா பட்ட இறுதியாண்டு பரீட்சை இன்று 20-ம் திகதி கொழும்பில் நடத்தப்படும் என்ற தகவல் தவறானதுஎன்று யாழ் லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சை சம்பந்தமாக ஆயுர்வேத திணைக்கள ஆணையாளர் இன்னும் தங்களுக்கு தகவல் தரவில்லை என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆலோசனைக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

மட்டுப்படுத்தப்பட்ட அஞ்சல் சேவையை ஏற்படுத்த அஞ்சல் அலுவலகங்களை இயக்குவது சம்பந்தமான ஆலோசனைகளைப் பெற்று அது சம்பந்தமான முடிவெடுக்க அஞ்சல் திணைக்களத்தின் பொறுப்பு அஞ்சல் அதிபர்கள், உதவி அஞ்சல் அதிபர்கள், உப அஞ்சல் அதிபர்கள்,சிற்றூழியர்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பதிலாட்கள் அனைவரையும் எதிர்வரும் 22-ம் திகதி திங்கட்கிழமை காலை 9 30 மணிக்கு யாழ்ப்பாணம்பிரதம அஞ்சலகத்தில் சமுகம் தருமாறு யாழ் மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ச. சடாட்சரநாதன் கேட்டுள்ளார்.

## யுவதியின் துணிகரம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாட்டின் வீதியில் உள்ள ஒரு வீட்டில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன் நகைகளைத் திருடிய திருடன் அதே வீட்டு யுவதிஒருவரால் நேற்று மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

மேற்படி வீட்டில் நகைகளைத் திருடிய திருடன் நேற்று யாழ். நகரிலுள்ள கடை ஒன்றுக்கு முன்பாக நின்றபோது, அந்த வீட்டு யுவதி திருடனை அடையாளம் கண்டு, தனது சிநேகிதிகளின் உதவியுடன் திருடனை மடக்கிப் பிடித்து, விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தார். (வி)

### ஆனையிறவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பத்தினர் இவ்வாறான ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாஸாவிடமும், மற்றும் பாதுகாப்பு அமைச்சு, இராணுவத் தலைமையகத்திடமும் எழுத்து மூலம் இவ்வேண்டுகோளை அவர்கள் விடுத்துள்ளனர்.

'போரில்புலிகளைவெல்லமுடியாது. ஆனையிறவு முகாமை அவர்கள் எப்படியும் பிடித்தே தீருவார்கள். எமது இராணுவத்தினரின் வீணான இழப்புக்களைத் தவிர்க்க புலிகளுடன் சமரசப் பேச்சு நடத்தி அவர்களை மீட்டுத்தருமாறு கோருகிறோம்'' என்று அவர்கள் எழுதிய கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எழுபது கோடி ரூபா செலவில் தமிழக காவல்துறை நவீன மயம்

## முதல்வர் ஜெயலலிதா நடவடிக்கை

(சென்னை)

தமிழக காவல்துறை நவீனமயப்படுத்தப்படும் என்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

அண்மையில் புதுடில்லி சென்று திரும்பிய பின் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்

இத்திட்டத்தின்படி காவல் துறையினருக்கு நவீன ஆயுதங்கள், புதிய போக்குவரத்து வாகனங்கள், தொலைதொடர்புச் சாதனங்கள் போன்றவை வழங்கப்படவுள்ளன. என்றும் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:முழுமையான பொலிஸ் அக்கடமி, தனி அதிரடிப் பொலிஸ்பிரிவு அக்கடமி போன்றவை தமிழகத்தில் நிறுவப்படும்.

தமிழக கடலோரப் பாதுகாப்பிற்காக தனிப்பொலிஸ் பிரிவும் அமைக்கப்படவுள்ளது. இவை எல்லாவற்றுக்குமாக எழுபது கோடி ரூபா செலவு செய்யப்படும்.

தமிழகத்தில் அகதிமுகாம்களைத்தவிர வெளியில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் தம்மைப் பதிவு செய்யும் திகதி எக்காரணம் கொண்டும் நீடிக்கப்படமாட்டாது.

## ஆச்சரியம் தரும் தகவல்

[லண்டன்]

ஆனையிறவு பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்துக்குமிடையில் நடைபெற்றுவரும் யுத்தத்தில் இதுவரை 500 விடுதலைப்புலிகளை தாம் கொன்றுள்ளதாக இலங்கை இராணுவ அதிகாரி நேற்று கொழும்பில் கூறிய கூற்று ஆச்சரியத்தை தருவதாக இருக்கின்றது என்று பி. பி. ஸி. செய்தியாளர்கள் தெரிவித்தார். (வி)

## பெண் பலி

(வவுனியா)

வவுனியா பேயாடி கூழாங்குளம் பகுதியிலிருந்து நேற்றுக் காலை 9-30 மணியளவில் சிறிது தூரம் முன்னேறிய இராணுவத்தினர் பொதுமக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம்செய்ததில் ஒரு பெண் கொல்லப்பட்டார். இருவர் படுகாயமடைந்துள்ளனர். [க]

### முன்னர்வந்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ந்த இந்த முகாம் புலிகளின் வசம் விழ்ச்சியுறும் பட்சத்தில் அது இலங்கைஅரசுக்கு பெரும் தாக்கத்தை உள்ளூரிலும் சர்வதேச ரீதியிலும் ஏற்படுத்தவிருப்பதால் அரசு தனது முழுப் பலத்தையும் பயன்படுத்தி மீட்டெடுக்கும் விதமாக மேலதிக படைகளை அனுப்பி வைப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### நேருக்குநேர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: ஆனையிறவில் இரு தரப்பினரிடையேயும் உக்கிர மோதல் இடம்பெற்று வருவதாகவும்விடுதலைப் புலிகளுடன் மோதும் படையினருக்கு உதவியாக மற்றொரு புதிய படையணி அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (க)

### வீரமரணம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

குமுதன் [வைத்திலிங்கம் தயாளன் சிறுப்பிட்டி], மோகன் [ஆறுமுகம் அரசரத்தினம் மூதூர்], குரு [பரராசசிங்கம் விமலேஸ்வரன் யாழ்ப்பாணம்] சைமன் [ஜோசப் மக்கன்ஸிப் பிரதீப் - மானிப்பாய் ], கோகிலா [குணநாயகம் மங்கையர்திலகம் - திருமலை], விஜிதா [சின்னப்பு சிவராணி உரும்பிராய்], ஆகிய மாவீரர்களின் புகழுடம்புகள் நேற்று வட்டுக்கோட்டை திருஞான சம்பந்தர் மகாவித்தியாலயத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

பொதுமக்களின் அஞ்சலிக்குப் பின் நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்தில் யாழ் மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் ஆத்தி, திருவாளர்கள் செல்வம், குகதாஸ் மாஸ்டர், ரஞ்சன் மாஸ்டர் ஆகியோர் இரங்கல் உரை நிகழ்த்தினார்கள். (வி)

### ஆனையிறவு மோதல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பிரதான இராணுவ முகாம் மற்றும் வெற்றிலைக்கேணி பகுதிகளில் நிலைகொண்ட படையினரைநோக்கி விடுதலைப்புலிகள் மோட்டார்பீரங்கிகளாலும் ராக்கெட்டுகளாலும் கடுமையாக தாக்கிவருதாகவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (க)

# படகுச்சேவை இல்லாது மக்கள் அவதி

[யாழ்ப்பாணம்]

யாழ். நகருக்குப் பல்வேறு காரணங்களுக்காக வந்த 140 பொதுமக்கள் நெடுந்தீவுக்குத் திரும்பிச் செல்லமுடியாது பெரும் கஷ்டப்படுவதாகக் கூறப்படுகிறது.

ஊரடங்குச் சட்டம் தற்போது அமுலிலிருப்பதால் நெடுந்தீவுக்குப் படகுச்சேவையினை நடாத்துவதற்குக் கடற்படையினர் அனுமதி வழங்க மறுத்ததினாலேயே இந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்லமுடியாது அவதிப்படுவதாகவும் தமது மனைவி, மக்களைச் சென்று பார்ப்பதற்கு உடன் ஆவன செய்து தருமாறு யாழ். அரச அதிபரை இந்த மக்கள் கேட்டுள்ளனர்.

இவர்களைச் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்காகச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் காரைநகர் கடற்படைத் தளபதியுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் கூறப்படுகின்யது. (வி)

### கட்டைக்காட்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளனர்.

புலிகளின் தாக்குதலினால் சேதமடைந்த குண்டுவீச்சு விமானம் அவசரமாக பலாலியில் தரையிறங்கியுள்ளது.

இதேபோல் சேதமடைந்த ஹெலி பலாலியில் இறங்க முடியாத நிலையில் அதற்கு அருகிலுள்ள இராணுவ காவல் அரண்பகுதியில் தரையிறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வி)

### பெருமளவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படுவதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இரத்மலானைக்குதொடர்ச்சியாக விமானங்கள் வருவதும் அங்கிருந்து 'அம்புலன்ஸ்' தொடர்ந்தும் விரைந்த வண்ணமிருப்பதாகவும் அச்செய்தி மேலும் தெரிவித்தது. [சி]

### நவீன ஆயுதம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இவ்வகை இராணுவத் தளபாடங்களால் இராணுவமுகாமினுள் இருக்கும் படையினருக்குப் பெரும் சேதமேற்படல் கூடிய சாத்தியமிருப்பதாக் அது பற்றிப் படையினர் கவனமாக ஆராய்ந்து வருகிறார்களாம்.

இவை எவ்வகை ஆயுதங்கள் ளென தெரிவிக்கப்படாத போதும்புதிய தாக்குதல் விமானங்களாகவே இவை இருக்கலாமெனக் கருதப்படுகிறது. (சி)

### படைகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் முன்னேற முடியாது திணறுவதையுமடுத்தே இந்த அவசர நடவடிக்கை குறித்து ஆராயப்பட்டு வருகிறதாக 'ஏஜென்ஸி' செய்தி ஒன்று தெரிவித்தது. (சி)

### ருகம

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருகமவுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

ருகமவிலுள்ள அவர்களது இல்லங்களில் இறுதிச்சடங்குகள் நடைபெற்றன.

## விசேட அறிவித்தல்

[யாழ்ப்பாணம்]

தற்போது நடைபெறும் போர்க்கால சூழலுக்கு ஏற்ப சகல தனியார் கல்வி நிறுவனங்களும் மறு அறிவித்தல் வரை எவ் வகுப்புக்களையும் நடத்தாமல் போர்க்கால சூழலுக்கேற்ப ஒத்துழைக்கும்வண்ணம் யாழ். மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியச் செயலாளர் கேட்டுள்ளார்.

### பிரான்சில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டு விமான நிலையத்துக்குள் கூட இலங்கையர்கள்இனி மேல் இறங்க அனுமதிக்கப்படமாட்டார்களென தூதரகம்மேலும் தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் வழியாக வெளிநாடு செல்லும் இலங்கையர் பிரான்ஸில் தங்கி அரசியல் தஞ்சம் கோருவதை தடுக்கும் முகமாக மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தூதரகம் தெரிவித்துள்ளது. (க)

## போர் முனையில் ஹமில்டன்

[யாழ்ப்பாணம்]

கட்டைக்காட்டில் இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதிக்கு நேற்று இராணுவத்தளபதி ஜெனரல் ஹமில்டன் வணசிங்க வந்துசென்றுள்ளதாக ரூபவாஹினி செய்தி தெரிவித்தது.

### ஹெலி தாக்குதலில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலை மேற்கொண்டதில்தந்தையும். மகனும் பலியானார்கள். அத்துடன் அதே குடும்பத்தை சேர்ந்த தாயும் 3பிள்ளைகளும் உறவினர் ஒருவரும் படுகாயமடைந்து யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயப்பட்டோர் விபரம் வருமாறு:- ஆறுமுகம் சரஸ்வதி [48-வயது], ஆறுமுகம் கலைமகள் [20-வயது], ஆறுமுகம் தவரூபி (6-வயது), ஆறுமுகம் கலைமோகனதாஸ் [14-வயது] இவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நாகன் கந்தசாமி [48-வயது] வர்த்தகர் ஆகியோர் காயப்பட்டவர்களாவர். (56)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூலை 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/180385/81